செய்தி வெளியீடு எண்: 577 நாள்:08.09.2019

<u>செய்தி வெளியீடு</u>

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வெளிநாடு சுற்றுப்பயணம் முடித்துக் கொண்டு 10.9.2019 அன்று அதிகாலை சென்னை திரும்புகிறார்

தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகளை ஈர்த்திட இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் துபாய் ஆகிய நாடுகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசுமுறை பயணமாக 28.8.2019 முதல் 9.9.2019 வரை 13 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்கள்.

இந்த பயணத்தின் போது, இங்கிலாந்து, அமெரிக்க மற்றும் துபாய் ஆகிய நாடுகளிலுள்ள முக்கிய நகரங்களுக்கு சென்று, அங்குள்ள தொழில் முதலீட்டாளர்களையும், தமிழ் அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகளையும் சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு சாதகமாக உள்ள சூழலை எடுத்துரைத்து, தமிழ்நாட்டில் அதிக அளவில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுத்தார்கள். அத்துடன் பல்வேறு தொழில் நிறுவனங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் புதிய தொழில்நுட்பங்களை பார்வையிட்டு, அதை தமிழ்நாட்டில் செயல்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகளை பற்றியும் கேட்டறிந்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசுமுறை பயணமாக இங்கிலாந்து, அமெரிக்க மற்றும் துபாய் நாடுகளுக்கு சென்று, தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் முதலீடுகளை ஈர்த்து, வெற்றிகரமாக சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு 10.9.2019 அன்று அதிகாலை 2.40 மணிக்கு சென்னை திரும்புகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**